# பாலினம் சார்ந்த உள்ளூராட்சி முறைக்கான வழிகாட்டுதல்கள்



இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம்

உள்ளூர் பெண்களை வலுப்படுத்துவதன் ஊடாக
உள்ளூராட்சி சேவையினை நவீனமயப்படுத்தல்

FSLGA
FSLGA ACADEMY
FCM FEDERATION OF CANADIAN MUNICIPALITIES FÉDÉRATION CANADIENNE DES MUNICIPALITÉS
In partnership with Canada



## சமர்ப்பணம்

உள்ளூர் பெண்களை வலுப்படுத்துவதன் மூலம் உள்ளூராட்சி சேவைகளை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் (PMI-WILL) கீழ் இந்த வழிகாட்டல் கையேடு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்காக கனடா அரசாங்கம் வழங்கிய நிதி உதவி மற்றும் கனடா உள்ளூராட்சி அமைப்பின் தொழிநுட்ப வழிகாட்டல் மற்றும் பங்களிப்பினையும் நாம் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றோம். இலங்கையினுள் பெரிதளவில் உள்ளீர்க்கப்பட்டதும் பாலினம் சார்ந்த உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்துவதில் இவர்கள் வழங்கும் ஒத்துழைப்பு பாராட்டத்தக்கதாகும்.

# முன்னுரை

உள்ளூராட்சி மன்ற நிறுவனங்கள் தமது சேவைகளை வழங்குகையில் சில விடயங்கள் மீது உணர்திறனுடன் செயற்பட வேண்டியுள்ளன. இதன்போது சமூகத்தின் தன்மை குறித்து கவனம் செலுத்த வேண்டுமென்பதுடன், குறிப்பாக பாலினம் மீது கவனம் செலுத்துவது முக்கியமானதாகுமென அடையாளம் காணப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி நிறுவனத்தின் சேவை வழங்கலில் அதன் வரவு-செலவு திட்டம் அடிப்படையானதாக அமைகின்றது. வருமானத்தை திரட்டுவதற்கும் அதனை செலவு செய்வதற்குமான திட்டமாக உள்ளூராட்சி நிறுவனங்களின் வரவு – செலவு திட்டம் கருதப்படுவதுடன், இதன்போது சமூகத்துக்கு தேவையான சேவைகளை வழங்கும் செயன்முறையில் பாலின உணர்திறன் மிக்க சேவைகளை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

பாலின உணர்திறன் மிக்க சேவைகளை வழங்குவதற்கு தேவையான வரவு-செலவு திட்டத்தினைத் தயார் செய்வதற்கான வழிகாட்டியாக இப்படிமுறையைப் பயன்படுத்த முடியுமென்பதுடன், இதன் இறுதி நோக்கம், பாலின உணர்திறன்மிக்கதொரு உள்ளூராட்சி நிருவாக முறைமையொன்றைத் உருவாக்குவதாகும்.

இச்செயற்பாட்டின் முதன்மை படிமுறையாக பாலினம், பால் வேறுபாடு மற்றும் இந்த விடயங்களுக்கு இடையிலான தொடர்பு போன்ற அடிப்படை கோட்பாடுகள் பற்றிய புரிந்துணர்வினைப் பெறுதல் அவசியமானதாகும்.

இரண்டாவது படிமுறையாக, இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பாலின உணர்திறன் மிக்கதொரு வரவு–செலவு திட்டத்தை தயார் செய்வது எவ்வாறு என்பது தெளிவுபடுத்தப்படுகின்றது.

சமூகத்தின் சகல தரப்பினர்களையும் உள்ளீர்த்தவாறு மிகவும் சிறந்ததொரு சேவையினை வழங்கும் நோக்கில் தயார் செய்யப்பட்டுள்ள இந்த வழிகாட்டல் கோவையானது இச்செயன்முறையினை நடைமுறைப்படுத்தும் விதம் குறித்து தெளிவுபடுத்துகின்றது.

**தயாரிப்பு**

**இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம்**

# உள்ளடக்கம்

01. அறிமுகம் 05 - 07

02. அடிப்படை எண்ணக்கருக்களை அடையாளம் காணுவோம் 08- 12

03. உள்ளூராட்சி நிறுவனத்தின் வரவு-செலவு திட்டம் தயாரிப்பு செயன்முறையில் பாலினத்தினை உட்புகுத்துதல் 13 - 21

04. பாலின உணர்திறன்மிக்க வரவு-செலவு திட்டம் தயாரிப்பதற்கான செயன்முறை படிநிலை 22 - 24

05. பின்னூட்டல் மற்றும் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் செயன்முறை 25 – 29

06. இணைப்புகள் 30 – 38



# 1.அறிமுகம்

## 1.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பாலினம் சார்ந்த வரவு–செலவு திட்ட வழிகாட்டல் கோவையினை தயாரித்ததன் நோக்கம்.

குறிப்பிட்டதொரு உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசத்துக்கான சமூக பொருளாதார கொள்கைகளைத் வகுப்பதற்கு வரவு-செலவு திட்ட அறிக்கையானது அடிப்படையாக அமைகின்றது. உள்ளூராட்சி நிறுவனமொன்றின் வரவு–செலவுத் திட்டத்தை தயார் செய்கையில், சமூகத்தின் பல்வேறு குழுக்களின் தேவைகளை அடையாளம் காணுவதன் மீது அதிக கவனம் செலுத்தப்படாமையால், பாலின உணர்திறன்மிக்க வரவு-செலவு திட்ட வழிகாட்டல் கோவை தயார்செய்யப்பட்டுள்ளதுடன், பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### பாலின சமத்துவம்

தமது ஆளுகைப் பிரதேசத்தில் வாழும் பெண்கள், ஆண்கள் அல்லது விசேட பால் அடையாளத்தைக் கொண்டுள்ள நபர்களின் தேவைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கு பதிலளிக்க கூடிய திறனை கொண்டிருத்தலுடன், இதன்போது பெண்களை வலுப்படுத்தக் கூடியதாக இருப்பதும் ஒரு முக்கிய விடயமாகும்.

### பொருளாதார வளத்தை ஏற்படுத்துதல்

அனைத்து வளங்களையும் சமனான விதத்தில் நியாயமான முறையில பகிர்வதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள பலவீனமான சமூகத்தை வலுப்படுத்த உதவும்.

### பொறுப்புக்கூறல்

பாலினம் சார்ந்த வரவு - செலவு திட்டத்தை தயாரிப்பதன் மூலம், சமூகத்தின் அனைத்து பிரிவுகளினதும் பாலின சமத்துவத்தை அடைவதற்கான பொறுப்புணர்வை உறுதி செய்ய உள்ளூராட்சி நிறுவனங்களை ஊக்குவித்தல்.

### வளங்களின் நியாயமான பகிர்வு

சமூகத்தின் பல்வேறு மக்கள் பிரிவுகளினதும் குறிப்பிட்ட தேவைகளை அடையாளம் காண்பதன் மூலம், அவற்றை பூர்த்தி செய்யக் கூடியவாறு நியாயமான முறையில் வளப்பகிர்வினை மேற்கொள்ளும் வகையில் வரவு செலவு திட்டத்தை தயாரிக்க முடியும். இங்கு ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பெண்கள் மற்றும் ஆண்களை எவ்வாறு வித்தியாசமாக பாதிக்கின்றன என்பதை அடையாளம் காண முடியும். மேலும் ஏற்படும் விளைவுகளை நியாயமானமுறையில் ஆய்வு செய்வதன் மூலம் குறைபாடுகளை குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அனைவருக்கும் நியாயமான விதத்தில் சேவையினை வழங்கக் கூடியதாக இருக்கும்.

## 1.2 ஆலோசனை வழிகாட்டலின் நோக்கம்

பாலினம் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பான கோட்பாடுகளை அடையாளம் கண்டு புரிந்துகொள்வதன் மூலம், உள்ளூராட்சி நிறுவனத்தில் பாலின உணர்திறன் மிக்க வரவு செலவு திட்டத்தினை தயாரிப்பதற்கான வழிமுறையை அறிமுகப்படுத்துவதே இந்த வழிகாட்டுதலின் நோக்கமாகும். உள்ளூராட்சி நிறுவனத்தின் வரவு செலவு திட்டத்தினை தயாரிப்பது தொடர்பான சட்ட விதிகளும் இணைப்பாக கொடுக்கப்பட்டுள்ளன.

## 1.3 இலக்கு குழு

உள்ளூராட்சி நிறுவனங்களின் வரவு-செலவு திட்டத்தினை தயார் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் இங்கு முதன்மை இலக்கு குழுவாகக் கருதப்படுகின்றனர். இரண்டாவது இலக்கு குழுவாக, உள்ளூராட்சி நிறுவனங்களில் பல்வேறு குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரஜைகளாவார்கள். பாலினம் சார்ந்த கோட்பாடுகள் மற்றும் இவற்றுக்கு பதிலளிக்கும் வழிமுறைகளை சரியாகப் புரிந்துகொள்வதன் மூலம் இவர்களுக்கு வரவு-செலவு திட்டத்தினை தயார் செய்யும் செயன்முறையில் சிறந்த விதத்தில் பங்குகொள்ள முடியும்.



# 02. அடிப்படைக் எண்ணக்கருக்களை அடையாளம் காணுவோம்

## 2.1 பாலினம்

பாலினம் என்பது சமூக மற்றும் கலாச்சார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளதொரு எண்ணக்கருவாகும். குறிப்பிட்டதொரு சமூகத்தில் பெண், ஆண், ஆண் பிள்ளை மற்றும் பெண் பிள்ளையிடம் எதிர்பார்க்கப்படும் வகிபாகம் சமூகம் உருவாக்கியுள்ளது. இதன்போது, குறிப்பிட்ட சமூகத்தின் கலாச்சாரத்தின் அடிப்படையில் விழுமியங்கள், நம்பிக்கைகள் மற்றும் அவர்கள் கடைப்பிடிக்கும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒவ்வொரு பாத்திரத்துக்கும் தனித்துவமான நடத்தைகள் மற்றும் பழக்க வழக்கங்கள் கட்டியெழுப்பப்பட்டிருக்கும்.

உதாரணமாக- ஒரு குடும்பத்தில் தந்தைக்கும் தாய்க்குமான தனிப்பட்ட பொறுப்புகள் சமூகத்தினால் வழங்கப்பட்டிருக்கும். தாய் குழந்தைகளைப் பெற்றெடுக்க வேண்டும், அவர்களை வளர்க்க வேண்டும், மேலும் தனக்குச் சொந்தமான பிற சமூகப் பாத்திரங்களை நிறைவேற்ற வேண்டும், அதே நேரத்தில் தந்தை பெரும்பாலும் வருமானம் ஈட்டவும், வீட்டில் ஒரு பெண் செய்ய முடியாத கடினமான பணிகளைச் செய்யவும் கட்டாயப்படுத்தப்படுகிறார். ஆண் பிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கும் இவ்வாறு தனித்துவமான வகிபாங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

நடத்தை, ஆடை அணிகலங்கள் மற்றும் அவர்களது பயணங்கள் தொடர்பில் சமூகமானது ஆண் பிள்ளைகளையும் விட பெண் பிள்ளைகள் மீது கூடிய கவனம் செலுத்துவதுடன், ஏதேனும் காரணத்துக்காக இவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு மாறாக செயற்படுவார்களேயாயின், அவர்கள் சமூகத்தினால் வன்மையாக விமர்சிக்கப்படுவார்கள்.

இந்த காரணிகள் கலாச்சாரத்திற்கு கலாச்சாரம், ஒரே நாட்டில் ஒரே சமூகக் குழுக்களுக்கு இடையே, மற்றும் நாட்டிற்கு நாடு கூட மாறுபடும். உதாரணமாக – ஒரே இனக் குழுவைச் சேர்ந்த நகரத்தில் வாழும் பெண்ணும் கிராமத்தில் வாழும் பெண்ணும் முகம் கொடுக்கும் சமூக அழுத்தங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருக்கும். பெரும்பாலும், பெண்கள் மற்றும் ஆண்களின் பாத்திரங்களுக்கு இடையே ஒரு அதிகார ஏற்றத்தாழ்வைக் காணலாம். இதன் விளைவாக பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளமை புலனாகின்றது.

## 2.2 பால் வேறுபாடு

மனிதர்கள் மற்றும் விலங்குகளின் உயிரியல் விஞ்ஞான காரணிகளின் அடிப்படையில் பால் வேறுபாடு அமைந்துள்ளது. இது முக்கியமாக பால் உறுப்புகள், இனப்பெருக்க இயலுமை, ஹோர்மோன்கள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் நிறமூர்த்திகள் போன்ற பௌதீக மற்றும் உளரீதியான தன்மை மீது தங்கியுள்ளன. பெரும்பாலும், புதிதாகப் பிறந்த சிசுவின் பால் உறுப்பினை அவதானித்து இச்சிசுவின் பால் வேறுபாடு தீர்மானிக்கப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு இப்பிள்ளையின் பால்நிலை தீர்மானிக்கப்படுகின்றது.

## 2.3 பாலின சமத்துவம்

பாலினத்தை அடிப்படையாக வைத்து இருபாலரையும் இருவேறு விதமாக கவனிப்பதைத் தவிர்த்தல் பாலின சமத்துவமென கருதப்படுகின்றது. இது ஆண்கள், பெண்கள், ஆண் பிள்ளைகள் மற்றும் பெண் பிள்ளைகளின் சம உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வாய்ப்புகளைக் குறிக்கிறது.

பெண்கள் மற்றும் ஆண்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வாய்ப்புகள் அவர்கள் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறக்கிறார்களா என்பதைப் பொறுத்தது அல்ல. பாலின சமத்துவம் என்பது பெண்கள் மற்றும் ஆண்களின் வெவ்வேறு குழுக்களின் பன்முகத்தன்மையை அங்கீகரித்து, பெண்கள் மற்றும் ஆண்கள் இருவரின் நலன்கள், தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் கருத்தில் கொள்ளப்படுவதைக் குறிக்கிறது.

### 2.4 பாலின சமத்துவமின்மை

இதன்போது பால் அல்லது பாலின அடிப்படையாகக் கொண்டு ஒரு குழுவினர் மற்றைய குழுவினரை விட உயர்ந்தவர்கள் அல்லது அதிக வரப்பிரசாதங்களைப் பெறுவதற்கான உரித்துடையவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு பாதிப்பு நேரக் கூடும்.

### 2.5 பாலினம் மீது உணர்திறன் காட்டுதல்

பெண்கள், ஆண்கள் மற்றும் சமூகத்தின் மூன்றாவது குழுவினரிடம் (பெண்கள் அல்லது ஆண்கள் என அடையாளம் தெரியாத) காணப்படும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வகிபாகங்கள் குறித்து குறிப்பிட்டதொரு சமூக கலாசாரத்தின் விதிமுறைகள் நியமங்கள் மற்றும் வேறுபாடுகளை புரிந்து கொண்டு அவற்றை கருத்தில் கொண்டு செயற்படுதல். இதன்போது, பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்கள் மற்றும் பெண்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் வேறுபட்ட பதிலிருப்புகள், அநுபவங்கள், சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் குறித்து உணர்திறனுடன் செயற்படுதலும் அவற்றை ஏற்றுக்கொள்ளுதலும் அவற்றை மதித்தலும் முக்கியமானதாகும்.

### 2.6 பாலினத்திற்கு பதிலளித்தல்

பாலினத்திற்கு தனித்துவமான விடயங்களை அடையாளம் காணுதல், புரிந்து கொள்ளுதல் மற்றும் கொள்கைள், வேலைத்திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குகையில் அத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பதிலிருப்பினை மேற்கொள்ளுதல் இதிலிருந்து கருதப்படுகின்றது. இதன்போது பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு காணப்படும் வகிபாகங்கள், அநுபவங்கள் மற்றும் சவால்கள் குறித்து கருத்தில் கொள்வது முக்கியமானதாகும். இவ்வாறு கூறுணர்வுடன் உரிய விதத்தில் பதிலளிப்பதன் மூலம் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் சமூத்தை வலுப்படுத்துவதற்கும் இது முக்கியமானதாகும்.

**பாலினம் சார்ந்த சுகாதார சேவைகளை வழங்கும் செயன்முறையின்போது பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.**

- பெண்களுக்கான பிணியாய்வுகளை நடாத்துகையில் அவர்களது அந்தரங்கத்துக்கு பாதுகாப்பான ஒரு இடத்தில் நோயாளர்களை பரிசோதிப்பதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்.
- ஆண் வைத்தியரொருவர் சேவையினை வழங்குவாராயின், பெண் உதவியாளரொருவரின் சேவையினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் அல்லது தமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு அந்த இடத்தில் இருப்பதற்கான அனுமதியை வழங்குதல் வேண்டும்.

- பெண்களுக்கு அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவர்களது பிணியாய்வு சேவைகளை பெண் வைத்தியரொருவரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- பொது இடங்களில் அமர்ந்திருப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- சிறார்களுக்கான பிணியாாய்வுகளின்போது குழந்தைகளுக்கு தாய்ப்பாலூட்டுவதற்கான இடத்தை ஒதுக்கீடு செய்தல்.
- தாய்மாருக்கான பிணியாய்வுகளின்போது பாதுகாப்பான மற்றும் இலகுவான அணுகுமுறைகளை தயார் செய்தல்.
- இளைஞர் யுவதிகளுக்கான உளவள பிணியாய்வுகளை நடாத்துகையில் அவர்களது தனிப்பட்ட அடையாளத்தைப் பாதுகாத்தல்.
- சமூக நோய்கள் போன்றவற்றை பரிசோதனைக்கு உட்படுத்தும்போதும், இந்நோயாளர்களின் தனிப்பட்ட அடையாளத்தைப் பாதுகாத்தல்.

### 2.7 சமூக குறுக்குவெட்டுகள் (Intersectionality)

சமூகமானது பல்வேறு விதத்தில் குறுக்குவெட்டுகளுக்கு உட்பட்டுள்ளது. பொருளாதார நிலைமைகள், மதங்கள், பல்வேறு இனங்கள், குலங்கள், பால் வேறுபாடு, வயது, தொழில், வாழும் சூழல், திருமணம் மற்றும் மொழி என்ற ரீதியில் குறிப்பிட்ட சமூக குறுக்கு வெட்டுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஒரே தனிநபர் பல்வேறுபட்ட குறுக்கு வெட்டுகளுக்கு ஆளாகக் கூடும் என்பதுடன், இதன் காரணமாக அவனுக்கு அல்லது அவளுக்கு சமூகத்தின் பல்வேறு தளங்களை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இதில் சாதகமான மற்றும் பாதகமான விளைவுகள் காணப்படுகின்றன.

உதாரணம்- வறியவரான மொழியறியாத ஒரு நபர் அரச நிறுவனமொன்றில் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு வருதல் மற்றும் செல்வந்தரான மொழியறிந்த ஒரு நபர் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு வருதல். இந்த இருவரில் யாருக்கு மிக இலகுவாக சேவையினை வழங்க வேண்டுமென சிந்தித்துப் பாருங்கள்.

### 2.8 பாலின பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல் (Gender Mainstreaming)

குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்கையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபட்ட அநுபவங்கள் காணப்படுகின்றன. சேவைகளை வழங்குகையில் பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அவை பெண்கள் மற்றும் ஆண்கள் மீது வெவ்வேறு விதமான அழுத்தங்களை ஏற்படுத்துகின்றது என்பதைப் புரிந்துகொண்டு குறிப்பிட்ட அபிவிருத்தி மற்றும் சேவை வழங்கல்களை திட்டமிடுதல் வேண்டும்.

ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள வேறுபாடுகளை கணக்கில் எடுத்துக்கொண்டு அனைவரையும் சமமாக வழிநடத்த வேண்டும்

உதாரணமாக தீர்மானம் மேற்கொள்ளும் இடங்களில் ஆண்களும் பெண்களும் ஒரே எண்ணிக்கையினராகக் காணப்பட்டபோதிலும், பெண்களுக்கு தமது கருத்துக்களை முன்வைப்பதற்கோ அல்லது தீர்மானம் மேற்கொள்வதன் மீது அழுத்தங்கங்களை பிரயோகிப்பதற்கோ வாய்ப்புக் கிட்டுவதில்லை எனில், இவர்களது பங்கெடுப்பினால் எந்தவித விளைவுகளையும் பெற்றுக்கொள்ள முடியாது என்பதுடன், இதன்போது மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை நீதியான மற்றும் சமநிலையான தீர்மானங்கள் என கருத முடியாது.

எனவே, பால்நிலை பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல் என்பது எண்ணிக்கைரீதியான பங்கேற்பினையன்றி முனைப்பான பங்கேற்பினைக் குறிக்கின்றது.

## 2.9 உள்ளூராட்சி நிறுவனங்களின் வரவு –செலவு திட்டத்தை தயார் செய்கையில் பாலினத்தை உள்ளீர்த்தல்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை தயார் செய்கையில் பாலின அடிப்படையாகக் கொண்டதொரு பார்வையில் அவற்றை பகுப்பாய்வு செய்தல் வேண்டும். இது ஆண் பெண் சமத்துவம் எனும் பரந்த நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். வரவு–செலவினைத் தயார் செய்யும் ஒட்டுமொத்த செயன்முறையின்போதும் இந்த விடயம் மீது கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். விளைவுகளை மிகவும் கவனமாக பகுப்பாய்வு செய்து ஏதேனும் குறைபாடுகளை அவதானிக்கும் பட்டசத்தில், அடுத்த வரவு – செலவினைத் தயார் செய்கையில் இதன் மீது விசேட கவனம் செலுத்தி அவற்றை திருத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.



# 03. உள்ளூராட்சி நிறுவனத்தின் வரவு-செலவு திட்டம் தயாரிப்பு செயன்முறையில் பாலினத்தினை உட்புகுத்துதல்

### 3.1 பாலினம் மீது கவனம் செலுத்தும் நடைமுறை மற்றும் மூலோபாயத் தேவைகள்

நடைமுறைசார் தேவைகளைக் கருத்தில் கொள்கையில் பௌதீக வளங்கள் மற்றும் சேவைகள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது. மூலோபாயத் தேவைகளின்போது சமூக எண்ணக்கருக்கள் மாற்றும் நீண்டகால செயற்பாடுகள் மீது கவனம் செலுத்தப்படுகின்றது.

| | நடைமுறைத் தேவைகள் | மூலோபாயத் தேவைகள் |
|---|---|---|
| 1 | குறுங்காலத்தில் விரைவாக நிறைவேற்றப்படுதல்.<br><br>உதாரணம்<br>உள்ளூராட்சி நிறுவனத்தின் வரவு- செலவு திட்டம் தயார் செய்யும்போது.<br>அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை மேற்கொள்ளும் போது.<br>தொற்றுநோய் பரவல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் போது. | நீண்டகால செயற்பாடுகள்<br><br>உதாரணம்- குறிப்பிட்டதொரு சமூகத்தில் பெண்களுக்கான கடமைகளில் ஒரு பகுதியை செய்வதற்கு ஆண்களைத் ஊக்குவித்தல்(சமைத்தல்,பிள்ளைகளை பராமரித்தல்). |
| 2 | அன்றாட தேவைகளை நிறைவேற்றுகையில்<br><br>உதாரணம்- சமூக நல நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது (தாய் பிணியாய்வு, வீதி விளக்குகள் பொருத்துதல், சுகாதார தேவைகள்) | பெண்களுக்கு குறைவான வரப்பிரசாதங்கள் அல்லது சமூக வரவேற்பு காணப்படும் சந்தர்ப்பங்களுடன் தொடர்புடையது.<br><br>உதாரணம்- கல்விக்கான உரிமை, தீர்மானம் மேற்கொள்வதில் முனைப்பான பங்கேற்பு, வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வளங்களைக் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்குமான வாய்ப்பு |
| 3 | இலக்கிடப்பட்ட உள்ளீடுகள் வழியாக இத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும்.<br><br>உதாரணம் - உணவு, சுகாதார வசதிகள் மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகளை வழங்குதல் | மனத்திடத்தை கட்டியெழுப்புவதன் மூலம் இத்தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியும்.<br><br>கல்விக்கான வாய்ப்புகள், அரசியல் பங்கேற்பு, தீர்மானம் மேற்கொள்வதற்கான சுதந்திரம் மற்றும் முனைப்பான பங்கேற்பு, உள்ளூராட்சி நிறுவனங்களில் பெண்களுக்கான ஆலோசனைக் குழுக்களை தாபித்தல் மற்றும் சிவில் சமூகத்தில் பெண்களில் பங்கேற்பு மற்றும் பெண்களின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்புகளின் செயற்பாடுகள். |
| 4 | பெண்களின் வாழ்க்கை மட்டத்தை உயர்த்த முடியும்: உதாரணம்- சுகாதார மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகள்<br><br>பெண்களின் பொருளாதார மட்டத்தை உயர்த்தும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | சமூகத்தில் பெண்களுக்கு உரித்தான இடங்களை உயர்த்துதலும் பெண்கள் பற்றிய எண்ணக்கருக்களை மாற்றுவதற்கு நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |
| 5 | பெண்களின் மரபார்ந்த வகிபாகம், சமூக எண்ணக்கருக்கள் மற்றும் தொடர்புகள் மாற்றமடைவதில்லை. | பெண்களுக்கு அதிகாரத்தை வழங்குவதன் மூலம் சமூக தொடர்புகள் மற்றும் மரபார்ந்த வகிபாகத்தை கிரமமாக மாற்ற முடியும். |

## 3.2 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பாலின உணர்திறன் மிக்க வரவு – செலவு திட்டத்தை தயார் செய்தல்

உள்ளூராட்சி நிறுவனமொன்றில் வரவு செலவு திட்டமானது, குறித்த உள்ளூர் அரசாங்க பகுதிக்குள் வாழும் சமூகத்தினருக்கு ஆண்டுதோறும் செயல்படுத்தப்படும் சேவைகள் மட்டும் திட்டங்கள் தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்கான அடிப்படையாக செயல்படும் மிக முக்கியமான ஆவணமாகும்.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பாலின உணர்திறன் மிக்க வரவு – செலவு திட்டம் தயாரிப்பதானது பின்வரும் காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகின்றது.

- சகல மக்கள் பிரிவினதும் தேவைகளைக் கருத்தில் கொள்வதுடன், அவர்கள் ஆர்வம் காட்டும் விடயங்களைக் கருத்தில் கொள்ளுதல்.
- பெண்கள் அல்லது ஆண்களுக்கு தனித்தனி வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட மாட்டாது என்பதுடன் அனைத்து கொள்கைகள், திட்டங்கள் மற்றும் சேவைகளும் மக்கள் தொகையின் அனைத்து பிரிவுகளின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் நலன்களுக்கு ஏற்ப உணர்திறன் மிக்கதாக இருக்கும்
- பிரதேச பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிக்கும். தெரு விளக்கு முறைமை சிறப்பாக செயற்படும் பிரதேசங்களில் வாழும் பெண்களுக்கு இரவு வரை தமது தொழில் அல்லது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.
- சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகள், கொள்கைகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு உள்ளூர் அளவிலான பங்களிப்புக்களை வழங்க முடியும்.
  உதாரணம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

### 3.2.1 பால்நிலை சமத்துவத்திற்கு உணர்திறன் மிக்க வரவு-செலவு திட்டம் தயாரிப்பதனால் கிடைக்கப்பெறும் நன்மைகள்

- தேவைகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டிய மக்கள் பிரிவுகள் அவர்களது தேவைகளை அடையாளம் கண்டு இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யும் செயன்முறையை வினைத்திறன்மிக்கதாக முன்னெடுத்தல்.
- அரச சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பிரிவினரை அடையாளம் காணுதலும் இச்செயன்முறையை பின்னாய்வு செய்தலும்.
- அரச கொள்கைகளை நடைமுறைப்படுத்துதலும் அவதானித்தலும் ஊழலை ஒழித்தலும்.
- வெளிப்பாட்டுத்தன்மை மற்றும் பொறுப்புக்களை அதிகரித்தல்.
- அபிவிருத்தி செயன்முறையின் விளைவுகள் மற்றும் ஜனநாயக நிருவாக முறையின் நன்மைகள் மக்களுக்கு வழங்கும் முகமாக சிவில் சமூகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.

- பால்நிலை பற்றிய தேசிய மற்றும் சர்வதேச அர்ப்பணிப்புகளின் முன்னேற்றத்தை அறிக்கையிடுதல்.
- பரிந்துரைத்தல் (advocacy) மற்றும் பின்னாய்வு செயன்முறையை வலுப்படுத்துதல்.
- புறக்கணித்தல், வினைத்திறனின்மை மற்றும் ஊழல் போன்ற விடயங்களை சவாலுக்கு உட்படுத்துவதற்குத் தேவையான தகல்களை வழங்குதல்.
- புதிய அல்லது மாற்று கொள்கைகளை தயார் செய்வதற்கான தகவல்களை வழங்குதல்.
- மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குதல்.
- வறிய மற்றும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள மக்களின் தேவைகளை அடையாளம் காணக் கூடியதாக இருத்தல்.

### 3.2.2 உள்ளூராட்சி நிறுவனங்களின் வரவு – செலவு திட்டம் தயார் செய்யும் செயன்முறையை பாலின அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தல்.

உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசத்தினுள் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறையின்போது வரவு–செலவு திட்ட அறிக்கையானது மிக முக்கியமான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் அடிப்படையாக அமைகின்றது.

வரவு–செலவு திட்டம் தயார் செய்யும் செயன்முறையை ஆராய்கையில் பின்வரும் படிமுறைகளை மேற்கொள்வது முக்கியத்துவம் பெறுகின்றது.

**படிமுறை 1**
- **பாலினம் மீது தாக்கம் செலுத்தும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல் (சூழ்நிலை பகுப்பாய்வு)**

**படிமுறை 2**
- **அடிப்படை - தரவு சேகரித்தல்**

**படிமுறை 3**
- **ஒவ்வொரு செயற்பாட்டையும் பாலின அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்தல்**

**படிமுறை 4**
- **குறிப்பிட்ட செயற்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்துள்ள நிதி ஏற்பாட்டை பாலின கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்தல்**

**படிமுறை 5**
- **சமத்துவத்தை மேம்படுத்தும் நிமித்தம், நோக்கங்கள் மற்றும் விதந்துரைகளை தயார் செய்தல்**

**படிமுறை 1 – பாலினம் மீது தாக்கம் செலுத்தும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல் (சூழ்நிலை பகுப்பாய்வு)**

சூழ்நிலை பகுப்பாய்வு என்பது ஒவ்வொரு துறையிலும் உள்ள பெண்கள், ஆண்கள், பெண் பிள்ளைகள் மற்றும் ஆண்பிள்ளைகளின் சூழ்நிலைகளை ஆழமாக ஆராய்வதாகும். இது அவர்களுக்கு இடையேயான ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை அடையாளம் காணவும் அவர்களின் நடைமுறை தேவைகள் மற்றும் முன்னுரிமைகளை அடையாளம் காணவும் உதவுகிறது.

ஒரு குறிப்பிட்ட திட்டத்தால் குறிவைக்கப்பட வேண்டிய குழுக்களை அடையாளம் காணலாம். அதாவது தொழில் வல்லுநர்கள், தொழிலற்றவர்கள் அல்லது வருமானம் இல்லாதவர்கள், வணிகர்கள், இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் மாணவர்கள்.

பாலின சமத்துவத்தை அடைவதற்கு நடைமுறை மற்றும் மூலோபாய தேவைகளை அடையாளம் காண்பது முக்கியம். நடைமுறை தேவைகள் சமூக பாத்திரங்களை அடிப்படையாக கொண்டவை. அதே நேரத்தில் மூலோபாயத்தேவைகள் சமூக பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகளை அடிப்படையாக கொண்டவை. நடைமுறை தேவைகளை பூர்த்தி செய்வது, வீட்டு வன்முறைகளை தடுப்பது, தொழிலுக்கேற்ற ஊதியம் வழங்குவது மற்றும் பாலியல் சுரண்டலை தடுப்பது போன்ற விடயங்களை அடைய உதவும்.

மூலோபாய தேவைகளை பூர்த்தி செய்வதில் பெண்கள், உழைக்கும் பிரிவு, வள அணுகல் மற்றும் பாலின அடிப்படையிலான அதிகாரம் போன்ற நீண்ட கால நலன்களை பாதுகாக்க முடியும்.

நடைமுறை தேவைகளில் மட்டும் கவனம் செலுத்துவது பாலின உறவுகளின் ஏற்றத்தாழ்வுக்கு வழிவகுக்கும். மூலோபாய தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் பெண்களும் ஆண்களும் சமூகத்தில் பாலின பாத்திரங்களின் சவால்களை எதிர்கொண்டு தங்கள் வாழ்க்கையில் ஓரளவு கட்டுப்பட்டை பெறலாம்.

ஒரு குழுவை பகுப்பாய்வு செய்வது என்பது அந்த குழுவிற்குரிய வேலைவாய்ப்பு நிலைமைகள், தொழில்கள் மற்றும் ஊதியம் பெற்ற மற்றும் பெறாத சேவைகள் போன்ற தகவல்களை விமர்சன ரீதியாக ஆராய்வதை உள்ளடக்குகிறது. இலக்கு குழுக்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் பொருத்தமான தகவல்களை சேமிக்க முடியும்.

**படிமுறை 2- அடிப்படை – உங்களுக்கான வேலைத்திட்டம் பற்றிய தரவுகளை சேகரித்தல்**

ஒரு திட்டத்தை பற்றிய தகவல்களை சேகரிக்க தயாராகும் போது, திட்டத்தின் நோக்கம், பாலின சமத்துவம், முக்கிய செயல்பாடுகள், வரவு செலவு, நிதி வழிமுறைகள் புள்ளிவிபரங்கள் மற்றும் தரவு, இலக்கு குழு, பயனாளிகள் போன்றவற்றை கருத்தில் கொள்வது அவசியம். இக்காரணிகளை மேலும் பகுப்பாய்வு செய்வது, தொடர்புடைய திட்ட நோக்கங்களை அடைவதட்கான திறன் பற்றிய கண்ணோட்டத்தை வழங்க முடியும்.

**படிமுறை 3- வேலைத்திட்டங்கள் / செயற்பாடுகள் / சேவைகள் ஆகியவற்றை பாலின கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்தல்**

பரந்த வேலைத்திட்டங்களை பகுப்பாய்வு செய்கையில் அதன் தலைமை உப வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் மீதான பகுப்பாய்வினை பாலின கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்வது இலகுவானது.

- பாலின சமத்துவம் தொடர்பில் காணப்படும் சமத்துவமின்மை மற்றும் சவால்களை கருத்தில் கொள்ளுதல்.
- பொதுச்சேவைகள் மற்றும் வேலைத்திட்டங்களின் பயனாளிகளை பகுப்பாய்வு செய்தல்.
- பொதுச் சேவைகள் மற்றும் வேலைத்திட்டங்களின் பயனாளிகளின் திருப்தி குறித்து பகுப்பாய்வு செய்தல்.
- பொதுச்சேவைகள் மற்றும் வேலைத்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துகையில் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையை பகுப்பாய்வு செய்தல்.
- இப்பொதுச் சேவைகள் மற்றும் வேலைத்திட்டங்கள் பாலினம் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல்.

**படிமுறை 4- பொதுச் சேவைகள் மற்றும் வேலைத்திட்டங்களுக்கான வரவு- செலவு ஒதுக்கீட்டை பாலின கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்தல்.**

- பொது வருமானம் மற்றும் செலவுப் பகுப்பாய்வானது பாலினம் மீது உணர்திறன்மிக்க வரவு – செலவினை தயார் செய்யும் செயன்முறையின் மிகவும் முக்கிய விடயமாகக் காணப்படுகின்றது.
- பொது வேலைத்திட்டங்கள் மற்றும் சேவைகளை நடைமுறைப்படுத்துகையில் ஆண் பயனாளிகள் மற்றும் பெண் பயனாளிகளை தனித்தனியாக அடையாளம் காண்பதன் மூலம் இப்பகுப்பாய்வு செயன்முறையினை முழுமையாகவும் இலகுவாகவும் மேற்கொள்ள முடியும்.
- பெண்கள் மற்றும் ஆண்களுக்கு விசேடமான தேவைகளை அடையாளம் காணுதலும் இவற்றுக்கு பதிலளிப்பதற்குப் போதுமான நிதி ஏற்பாடுகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதலும்.
- இந்நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஊழியர்களின் செலவுகளை கருத்தில் கொள்வதும் பெண்கள் ஆண்களுக்கான செலவுகளை தனித்தனியாக கணிப்பீடு செய்தலும் முக்கியமானதாகும்.
- இதனை வருடாந்த ரீதியிலும் ஒப்பீட்டு ரீதியிலும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு முன்னெடுப்பதன் மூலம் பாலினம் மீது உணர்திறன்மிக்கதொரு வரவு – செலவினை தயார் செய்வது பற்றிய சிறந்த பகுப்பாய்வினை மேற்கொள்ள முடியும்.

**_படிமுறை 5- பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான நோக்கங்கள் மற்றும் பரிந்துரைகளை தயார் செய்தல்**

- இலக்கிடப்பட்ட வேலைத்திட்டத்தின் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு வரவு – செலவினை பாலின கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.
- பாலின சமத்துமின்மையை அவதானிக்குமிடத்து அதனை திருத்துவதற்கான நோக்கங்கள், செயற்பாடுகள், செயலாற்றுகை சுட்டி மற்றும் நிதி ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்தல்.
- இந்த பரிந்துரைகள் மூலம் சமனான அணுகுமுறைகள் இலக்கிடப்பட்ட சேவைகளை வழங்குதல், மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.
- பாலினம் சார்ந்த எண்ணக்கருக்களை அங்கீகரித்தல் போன்ற விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.
- பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்கான இலக்குகளை அடைவதில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு இப்பகுப்பாய்வுகள் குறிகாட்டிகளை சரியாக விளக்க முடியும்.
- பரிந்துரைகள் உருவாக்கும் போது மாற்று பரிந்துரைகள் மீதும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.
- பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்ளும்இறுதி பொறுப்பினை ஏற்கும் உத்தியோகத்தர்களையும் அடையாளம் காணுதல் முக்கியமானதாகும்.

### 3.2.3 உள்ளூராட்சி நிறுவனங்களின் வரவு – செலவு திட்டத்தை தயார் செய்தல்

உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள் மீதான பொறுப்பானது அந்த நிறுவனத்திடம் உள்ளது.

இதற்காக ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனமும் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படையில் ஒரு நிதியாண்டுக்கான வரவு செலவு திட்டத்தை தயாரிக்க வேண்டும். ஒரு உள்ளூராட்சி நிறுவனத்தின் நிதியாண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை இயங்கும்.

உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிதி மற்றும் செயற்பாட்டு திட்டமும் நிதி முகாமைத்துவமும் இந்த வரவு செலவு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயார் செய்யப்படும்.

உள்ளூராட்சி நிறுவனமொன்றின் வருடாந்த வரவு – செலவுத் திட்டமானது குறிப்பிட்ட வருடத்துக்கு முந்திய வருடத்தில் தயார் செய்யப்பட்டு குறிப்பிட்ட வருடம் நிறைவடைவதற்கு முன்னர் உரிய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

இருப்பினும் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின்படி எந்தவொரு செலவினத்திற்கும் போதுமான ஒதுக்கீடு இல்லாத சந்தர்ப்பங்களில், செலவினத்தலைப்புகளுக்கு இடையில் ஒதுக்கீடு மாற்றப்படலாம் அல்லது பொருந்தக்கூடிய இடங்களில் துணை வரவு செலவு திட்டம் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

### 3.2.4 வரவு – செலவு திட்டத்தை பாலின உணர்திறன் மிக்கதாக தயார் செய்தல்.

- வரவு – செலவினைத் தயார் செய்யும் செயன்முறையின்போது அனைத்து படிமுறைகளையும் பாலின கண்ணோட்டத்தில் ஆராய்ந்து பார்த்தல்.
- பாலினத்தின் மீது உணர்திறனை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்காக விசேட நிதி ஒதுக்கீடு செய்தல்.
- வரவு–செலவினைத் தயார் செய்யும் செயன்முறையின்போது சமூகத்தின் கருத்துக்களை கேட்டறிவதற்கு மகளிர் செயற்பாட்டுக் குழுக்கள் மற்றும் பாலின தொடர்பான பரிந்துரையில் ஈடுபடும் (advocacy groups) குழுக்களின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளுதல்.
- வரவு – செலவு மீதான பதிலிருப்பு தொடர்பில் பின்னாய்வு செய்வதற்கு ஒவ்வொரு பாலினத்திற்கும் தனித்தனியாக பகுப்பாய்வு செய்யப்பட்ட தரவு சேகரித்து மதிப்பாய்வு செய்யவும்
- பாலின சமத்துவம் குறித்து கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதா என்பதை குறித்து ஆராய்வதற்கு தேவையான பாலின கணக்காய்வு (Gender Audits ) செயன்முறையினை அறிமுகப்படுத்துதல்.

### 3.2.5 உள்ளூராட்சி நிறுவனமொன்றின் வரவு – செலவு திட்டத்தை தயார் செய்வதற்கான நாட்காட்டி

| விடயம் | இலக்குத் திகதி | பொறுப்பு |
|---|---|---|
| வரவு செலவு திட்டம் தயாரிப்பதற்கான வழிமுறைகளை வழங்குதல் | ஏப்ரல் 15 | நகராட்சி ஆணையாளர்/நகராட்சி மன்ற செயலாளர்/ பிரதேச சபை செயலாளர் |
| முன்மொழியப்பட்ட பிரிவுக்குழுக்கள் மற்றும் உறுப்பினர்கள் தங்கள் திட்டங்களை முன்வைத்தல் | ஜூன் 30 | பிரதேச குழுக்கள் மற்றும் உறுப்பினர்கள் |
| ஒவ்வொரு துறையிலும் வருமானம் மற்றும் செலவீனங்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பித்தல். | ஜூன் 30 | அப்பிரிவின் தலைவர் |
| அடிப்படை மதிப்பீடுகளை தயாரித்தல் | ஜூலை 01 | கணக்காளர் /வரவு செலவு திட்ட அதிகாரி |

| | | |
|---|---|---|
| நிதிக்குழுவின் ஆலோசனை பெறல் | ஜுலை 31 | நகராட்சி ஆணையாளர் / செயலாளர் |
| மேயர் /தலைவரின் விமர்சனங்கள் | ஆகஸ்ட் 01 | மேயர் /தலைவர் |
| வரவு செலவு திட்ட கொள்கைகளை தீர்மானித்தல் மற்றும் அவற்றை சபையில் சமர்ப்பித்தல் | ஆகஸ்ட் 31 | மேயர் /தலைவர் |
| துறைசார் வரவு செலவு திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல் | செப்டம்பர் 30 | பிரிவின் தலைவர் |
| இறுதி மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் வரவு செலவு திட்ட ஆவணம் வரதல் | அக்டோபர் 31 | கணக்காளர் /வரவு செலவு திட்ட அதிகாரி |
| நிதித்துறை நிலைக்குழுவால் வரவு செலவு திட்ட பரிசீலனை | நவம்பர் 01 | நகராட்சி ஆணையாளர் / செயலாளர் |
| வரவு செலவு திட்டத்தின் செய்தி தயாரிப்பு | நவம்பர் 20 | மேயர் /தலைவர் |
| வரவு செலவு திட்ட வரைவு தயாரித்தல் | நவம்பர் 30 | மேயர் /தலைவர் |
| தேவைப்பட்டால் வரவுசெலவு திட்ட வரைவு ஆவணத்தை இரண்டாவது முறையாக சமர்ப்பிக்கவும் | டிசம்பர் 10 | மேயர் /தலைவர் |
| வரைவு ஆவண ஒப்புதல் பெறல் | டிசம்பர் 15 | சட்டசபை |

மூலாதாரங்கள்: உள்ளூராட்சி மறுசீரமைப்பு ஆணைக்குழு அறிக்கை 1999



# 4. பாலின உணர்திறன் மிக்க வரவு செலவு திட்டம் தயாரிப்பதற்கான உத்திகள்

## 4.1 திறன் விருத்தி

### 1. பயிற்சி திட்டங்கள்

உள்ளூராட்சி அரசாங்கத்தின் பாலின உணர்திறன் மிக்க வரவு செலவு திட்ட செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு பாலின பகுப்பாய்வு, வரவு செலவு திட்ட செயல்முறை, மற்றும் சமூக உள்வாங்கல் பற்றிய சரியான புரிதலை வழங்க தேவையான அறிவு மற்றும் திறன்களை வளர்த்தல்

### 2. செயல்நுணுக்கம் மற்றும் தொழிநுட்ப கருவிகளை (Tools) வழங்குதல்

பாலினம் மீது உணர்திறன்மிக்கதொரு வரவு – செலவினைத் தயார் செய்வதற்கும் அறிவினை தொடர்ச்சியாக வழங்குவதற்கும் தேவையான உத்திகள், தொழிநுட்ப கருவிகள் மற்றும் இணைய அடிப்படையிலான அறிவு போன்றவற்றை வழங்குதல்

### 3. அறிவுப் பரிமாற்றம்

பாலினம் மீது உணர்திறன்மிக்கதொரு வரவு செலவினை சிறப்பாக தயார் செய்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் அறிவினை ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான அறிவுப் பகிர்வு வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல்.

## 4.2 வரவு – செலவு திட்டம் தயார் செய்யும் செயன்முறையில் பிரஜைகளின் பங்கேற்பு

### 1. பொதுமக்களின் கருத்துக்களை வினாவுதல்

பல்வேறு சமூக பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் குடிமக்களிடமிருந்து கருத்துக்களை பெற விவாதங்கள், கலந்துரையாடல்களை நடத்துதல் மற்றும் பெண்கள் மற்றும் சமூகத்தால் ஒதுக்கப்பட்ட மக்கள் குழுக்களை ஈடுபடுத்துவதில் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும்.

### 2. பின்னூட்டல் குழுக்கள்

பாலினம் மீது உணர்திறன்மிக்கதொரு வரவு – செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் அவ்வாறே முன்னெடுக்கப்படுகின்றனவா என்பது குறித்து ஆய்வு செய்வதற்கு பிரஜைகளை உள்ளடக்கிய பின்னூட்டல் குழுக்களை தாபித்தல் வேண்டும். இப்பகுதியில் உள்ள அரசு சாரா நிறுவனங்களும், பாலின சமத்துவத்திற்காக வாதிடும் பணிகளில் ஈடுபட்டுள்ள குழுக்களும் இக்குழுவில் உள்ளடக்கப்பட வேண்டும்

### 3. பாலினம் மீது உணர்திறன்மிக்கதொரு வரவு – செலவினைத் தயாரிப்பது குறித்து விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்

குடிமக்களுக்கு, குறிப்பாக பெண்கள் மற்றும் விளிம்புநிலை குழுக்களுக்கு இந்த செயல்முறை மற்றும் அதன் நன்மைகள் மற்றும் இச்செயன்முறைக்கு அவர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்று தெரிவிக்கும் வகையில் விழிப்புணர்வூட்ட வேண்டும்.

## 4.3 இடர் முகாமைத்துவம் மற்றும் தணித்தல்

### 1. சவால்களை அடையாளம் காணல்

இச்செயற்பாட்டை மேற்கொள்கையில் முகம் கொடுக்கக் கூடிய அபாயங்கள் அதாவது உள்ளூராட்சி நிறுவனத்தில் அதிகாரிகளிடையே தேவையான திறமை காணப்படாமை, வேறுபட்ட முறைகளுக்கேட்ப மாற்றியமைக்க விரும்பாமை, தேவையான வளங்கள் இல்லாமை என இச்செயல்முறை மேற்கொள்ள எதிர்கொள்ளகூடிய பல்வேறுபட்ட சவால்களை அடையாளம் காணுதல்.

### 2. சவால் குறைப்பு செயன்முறைகள்

பாலினம் மீது உணர்திறன்மிக்கதொரு வரவு- செலவுத் திட்டத்தை தயார் செய்கையில் ஏற்படக் கூடிய தடைகளை குறைப்பதற்கான செயல்நுணுக்கங்களைத் தயார் செய்தல் வேண்டும்.

### 3. பொறுப்புக் கூறும் பொறிமுறை

இச்செயற்பாட்டை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு இது சார்ந்த தரப்பினர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்பினை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதுடன், இவர்கள் இது பற்றிய தெளிவான புரிந்துணர்வினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பிரஜைகளின் துன்பங்கள் மற்றும் பிரச்சினைகள் போன்றவற்றை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்துவதற்கான உகந்த செயன்முறையினை அறிமுகம் செய்தல் வேண்டும்.



# 5.பின்னூட்டல் மற்றும் பெறுபேறுகளை மதிப்பீடு செய்யும் செயன்முறை

பாலினம் மீது உணர்திறன்மிக்கதொரு வரவு – செலவு திட்டத்தை தயார் செய்து அதனை நடைமுறைப்படுத்துகையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள விளைவுகளை மேற்பார்வைக்கு உட்படுத்துவதற்கு உகந்த செயன்முறைகளைத் தயார் செய்தல் வேண்டும்.

## 5.1 குறிகாட்டிகள்

### 1. எண்ணிக்கைரீதியான குறிகாட்டிகள்

- பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களுக்கு வருடாந்த வரவு – செலவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள செலவு வீதம்.
- வழங்கப்பட்டுள்ள சேவைகளினால் பயனடைந்துள்ள பெண்கள் மற்றும் வலுவிழந்த சமூகங்களின் எண்ணிக்கையை அளவிடவும்
- தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையில் பங்குபற்றிய பெண்களின் எண்ணிக்கை

### 2. தர குறிகாட்டிகள்

- நியாயமான விதத்திலும் வலுவிழந்த சமூக குழுக்களை உள்ளீர்த்ததன் விளைவாக நன்மையடைந்துள்ள நபர்களின் கருத்துக்களை வினாவுதல்.
- உள்ளூராட்சித் துறையில் பாலின மற்றும் பாலின சமத்துவம் தொடர்பில் தற்போதுள்ள எண்ணக்கருக்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஏற்பட்டுள்ள விதம் குறித்து ஆராய்ந்து பார்த்தல்.

## 5.2. தரவுகளை சேகரித்தலும் பகுப்பாய்வு செய்தலும்

### 1. அடிப்படை மதிப்பீடு (Baseline Assessment)

பாலின மீது உணர்திறன் மிக்கதொரு வரவு – செலவினை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் ஏற்படும் மற்றும் ஒப்பிட்டு ரீதியில் இதனை கற்பதற்காக காணப்பட்ட நிலைமைகள் குறித்து ஆய்வினை மேற்கொள்ளுதல்.

**2.** பெண்கள் ஆண்கள் என்ற ரீதியிலும் மூன்றாவது குழுவினராகவும் ஆளுகைப் பிரதேசத்தினுள் வாழும் மக்களின் தரவுகளை புதுப்பித்தல்

மேற்கூறப்பட்ட பல்வேறு மக்கள் பிரினருக்கு ஏற்படும் தாக்கங்கள் குறித்து தனித்தனியாக ஆய்வு செய்வதற்கு இத்தரவுகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

### 3. பங்குதாரர்களின் பதில்கள்

பயனாளிகள், சிவில் சமூகத்தினர் மற்றும் சமூகத் தலைவர்களிடமிருந்து ஒழுங்குமுறையாகவும் தொடர்ச்சியான ஈடுபாடு முக்கியமானதாகும்.

### 5.3 முன்னேற்றத்தை அறிக்கையிடும் விதம்

- வருடாந்த அறிக்கைகள்

  பாலின மீது உணர்திறன்மிக்கதொரு வரவு–செலவினை தயார் செய்து நடைமுறைப்படுத்துகையில் அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் மற்றும் ஏனைய விடயங்களை அறிக்கையிடுவதற்கு வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியை ஒதுக்குதல்.

- சமூகத்துடன் தொடர்புளை ஏற்படுத்துதலும் விழிப்புணர்வூட்டுதலும்

  இச்செயன்முறையின்போது அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பொதுமக்கள் கூட்டங்கள் மற்றும் நிகழ்நிலை வழிமுறைகள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வேற்படுத்துவதன் வழியாக வெளிப்பாட்டுத்தன்மையை உறுதிப்படுத்துதல்.

### 5.4 மதிப்பீட்டு செயன்முறை

**அரையாண்டு மதிப்பீடு**

அரையாண்டு மதிப்பீட்டு செயன்முறையில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களை அடையாளம் கண்டு அவற்றை சிறப்பாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**விளைவுகளை மதிப்பீடு செய்தல்**

பாலின மீது உணர்திறன்மிக்கதொரு வரவு – செலவு திட்டத்தை தயார் செய்வதன் மூலம் மக்களின் நல்வாழ்வுக்கு பங்களிப்பு நல்கக் கூடிய நீண்டகால விளைவுகளை மதிப்பீடு செய்தல்.

**ஒப்பீட்டுரீதியிலான பகுப்பாய்வு**

ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனமும் அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் அநுபவங்களை சிறந்த பழக்க வழங்கங்களாக கருதி பகுப்பாய்வு முறையில் மதிப்பீட்டை மேற்கொள்ளுதல்.

### 5.5 பொறுப்புக் கூறலும் முன்னேற்றம் குறித்து ஆய்ந்தறிதலும்

- சுயாதீன மதிப்பீட்டுக் குழுவொன்றின் மூலம் கணக்காய்வினை மேற்கொள்ளுதல்.
- மதிப்பீட்டுக் குழுவின் முடிவுகளுக்கு ஏற்ப மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள் மீது கவனம் செலுத்துவதும் அந்த முடிவுகளை பங்குதாரர்களுடன் பகிர்ந்துகொள்ளுதலும்.

## பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தக்கூடிய முறையியல்கள்

### பாலின மீது உணர்திறன்மிக்கதொரு வரவு – செலவினை மதிப்பீடு செய்யும் முறையியல்

உள்ளூராட்சி நிறுவனமொன்று அதன் வரவு – செலவினைத் தயார் செய்யும் செயன்முறையில் பாலின சமத்துவத்தை உள்ளீர்த்தல் மற்றும் அனைவரதும் தேவைகளைக் கருத்தில்கொள்ளுதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டுள்ளதா என்பது குறித்து மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் முறையியலைப் பயன்படுத்த முடியும்.

### பயன்படுத்தக்கூடிய விதம்

ஒவ்வொரு கருத்திட்டத்தையும் அல்லது வேலைத்திட்டத்தையும் பின்வரும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்ய முடியும்.

**பாலினம் மீதான பதிலிருப்பினை ஆய்ந்தறிவதற்கு 1 முதல் 5 வரை மதிப்பிடுங்கள்**

| மதிப்பீட்டு அளவுகோல்கள் | விபரம் | மதிப்பீட்டுக்கான புள்ளிகள் |
|---|---|---|
| பாலின பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது | பெண்கள், ஆண்கள் மற்றும் வலுவிழந்த குழுக்களின் தேவைகளை அடையாளம் காண பகுப்பாய்வு நடத்தப்பட்டனவா? | ☑ ஆம் /(5) X இல்லை(0) |
| பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு வரவு – செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுதல் | பாலின மீது உணர்திறன் மிக்க வேலைத்திட்டங்களுக்கு வரவு – செலவு திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டின் சதவீதம் யாது? | 1- (குறைந்தபட்சம்)<br>5- ( அதிகமாக) |
| பங்கேற்பு மற்றும் கருத்துக்களை கேட்டறிதல் | வரவு – செலவினைத் தயார் செய்யும் செயன்முறையில் மகளீர் அமைப்புகள் மற்றும் பாலின பற்றிய விசேட அறிவினைக் கொண்டுள்ளவர்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளனவா? | ☑ ஆம் /(5) X இல்லை(0) |
| பாலின சமத்துவத்துக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் | சேவை வழங்கல், வள ஒதுக்கீடு போன்றவற்றில் பாலின சமத்துவத்தை உறுதி செய்வதற்காக இடைவெளியை குறைப்பதில் வரவு செலவு திட்டம் கவனம் செலுத்தியுள்ளதா? | ☑ ஆம் /(5) X இல்லை(0) |
| பின்னூட்டல் மற்றும் பொறுப்புக் கூறல் | இந்த வேலைத்திட்டங்களின் விளைவுகளை பகுப்பாய்வு செய்வதற்கும் அவற்றை திருத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முறையியலொன்று உள்ளதா? | ☑ ஆம் /(5) X இல்லை (0) |

**புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்த முடியும்.**

20-25 என்பது மிகவும் பாலின உணர்திறன் மிக்கதொரு வரவு செலவு திட்டம்
15-19 பாலின மீது ஓரளவு உணர்திறன் மிக்கதொரு வரவு செலவு திட்டம் ஆனால் மேலும் வளர்ச்சி அவசியம்
15 வயதுக்குட்பட்டோர் பாலின உணர்திறன அற்றது, ஆனால் அவசர நடவடிக்கைகளுக்காக எடுக்க வேண்டும்

**வரவு – செலவினை மேலும் மேம்படுத்துவதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள்**

- மகளீர் அமைப்புகளுடனான கலந்துரையாடல்கள் மூலம் மேலும் வலுப்படுத்துதல்
- பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள், கருத்திட்டங்களுக்காக வரவு –செலவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சதவீதத்தை அதிகரித்தல்.
- பின்னூட்டல் மதிப்பீடு மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறையை தொடர்ந்தும் வலுப்படுத்துதல்

# இணைப்பு 1

## வரவு – செலவினைத் தயார் செய்வதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள்

### மாநகர சபைகள்

| சட்டரீதியான ஏற்பாடுகள் | குறிப்பிட்ட விடயங்கள் |
|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டம்<br><br>211 வது வாசகம் | • வருடாந்த வரவு – செலவு அறிக்கையை முன்வைத்தல்<br>• ஒவ்வொரு வருடமும் எதிர் வரும் வருடத்துக்கான வரவு – செலவினை சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.<br>பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.<br>• குறிப்பிட்ட வருடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய வருமானம் மீதான மதிப்பீடு<br>• குறிப்பிட்ட வருடத்தில் மாநகர சபையினால் செலவு செய்வதற்கு உத்தேசிக்கும் செலவு பற்றிய விபரம்<br>• நகரமேயரினால் முன்னரே குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியில் நகரமேயரினால் மாநாகர சபைக்கான வரவு- செலவினை முன்வைத்தல் வேண்டும். |
| வாசகம் 212 | வரவு – செலவினை முன்வைக்கையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்<br><br>• நகரமேயர் பல நிலையியல் குழுக்களுடன் கலந்துரையாடியதன் பின்னரே வரவு செலவினை முன்வைத்தல் வேண்டும்.<br>• வரவு – செலவு அறிக்கையினை சபைக்கு முன்வைப்பதற்கு ஆகக் குறைந்தது ஏழு (07) நாட்களுக்கு முன்னதாக அதனை சகல நகரசபை உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளித்தல் வேண்டும்.<br>• வரவு – செலவு அறிக்கையை சபைக்கு முன்வைப்பதற்கு ஏழு (07) நாட்களுக்கு முன்னதாக பொதுமக்களின் கண்காணிப்புக்காக மாநகரசபை அலுவலகத்தில் அல்லது நகரமேயரினால் குறித்துரைக்கப்படுமொரு இடத்தில் பகிரங்கமாக வைத்தல் வேண்டும்.<br>• வரவு – செலவு பற்றிய அரசாங்க வர்த்தமானி அறிக்கை மற்றும் மாநாகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் பகிர்ந்தளிக்கப்படும் இரண்டு பத்திரிகைகளில் அல்லது அதற்கு அதிகமானவற்றில் பிரசுரிப்பதன் மூலம் அறிவித்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வாசகம் 213 | (iii) வரவு – செலவினை பொதுச் சபையில் கருத்தில் கொள்ளுதல்<br><br>நிதி வருடத்துக்கான இறுதி மாதத்தில் மாநகர சபையின் விசேட சபைக் கூட்டத்தில் வரவு – செலவு அறிக்கையினை இறுதியாக கருத்தில் கொள்ளுதல் வேண்டும். |
| வாசகம் 214 | குறைநிரப்பு வரவு – செலவினை முன்வைத்தல்<br><br>நகரமேயருக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறைநிரப்பு வரவு – செலவினை முன்வைக்க முடியும் என்பதுடன், குறைநிரப்பு வரவு- செலவினை முன்வைப்பதற்கு 07 நாட்களுக்கு முன்னர் அதனை உறுப்பினர்களுக்கு முன்வைத்தல் வேண்டும்.<br><br>மேலும், வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பத்திரிகையில் வெளியிட வேண்டுமென்பதுடன், பொதுமக்களின் பரிசீலனைக்காக பகிரங்கப்படுத்துதலும் கட்டாயமானதாகும். |
| வாசகம் 215 | சபையானது வரவு – செலவு அறிக்கை அல்லது குறைநிரப்பு வரவு – செலவு அறிக்கை தொடர்பில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.<br><br>• நிறைவேற்றுதல்<br>• திருத்துதல்<br>• புதிதாக விடயங்களை சேர்த்தல் அல்லது<br>• நிராகரித்தல்<br><br>வரவு செலவு / குறைநிரப்பு வரவு செலவு தொடர்பிலான விடயங்களுடன் நகரமேயர் உடன்படாத பட்சத்தில் குறிப்பிட்ட வரவு செலவு / குறைநிரப்பு வரவு செலவினை மீள்பரிசீலனை செய்வதற்காக சபைக்கு முன்வைக்க முடியும். |

**நகர சபைகள்**

| சட்டரீதியான ஏற்பாடுகள் | ஏற்புடைய விடயங்கள் |
|---|---|
| நகர சபை கட்டளைச் சட்டம் வாசகம் 178 (1) | • வருடாந்த வரவு – செலவினை முன்வைத்தல்<br>• சகல நகர சபைகளும் ஒவ்வொரு ஆண்டும் அதற்கு எதிர்வரும் ஆண்டுக்கான வரவு – செலவினைத் தயார் செய்து சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.<br>• தயார் செய்யப்பட்ட வரவு – செலவு அறிக்கையை தலைவர் சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.<br>• நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 193வது வாசகத்தின் பிரகாரம் ஆக்கப்பட்டுள்ள விதிகள் மூலம் அல்லது சபையின் துணைச்சட்டங்களினால் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முந்திய திகதியில் வரவு – செலவு அறிக்கையை சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.<br>• உள்ளூராட்சி ஆணையாளரினால் விதிக்கப்படும் மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை முன்வைத்தல் வேண்டும்.<br>• வரவு – செலவில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குதல் வேண்டும்.<br>  ◦ உத்தேச செலவு பற்றிய விபரங்கள் உரிய செலவுத் தலைப்புகளின் கீழ் விடய இலக்கங்களுடன் முன்வைக்கப்படுதல் வேண்டும்.<br>  ◦ வருமானவரி அல்லாத மூலாதாரங்களிலிருந்து சபைக்கு கிடைக்கப்பெறும் வருமானம் பற்றிய மதிப்பீடு<br>  ◦ உத்தேச செலவுகளுக்கான ஏற்பாடுகளை ஏற்பாடு செய்வதற்கு தேவையான வருமான வரி அல்லது வரி மீதான வருமான மதிப்பீடு. |

| | |
|---|---|
| வாசகம் 178 (2) | (II) குறைநிரப்பு வரவு செலவினை முன்வைத்தல்<br><br>குறிப்பிட்டதொரு வருடத்தில் புதிய செலவு விடய இலக்கத்தின் கீழ் அல்லது விடய இலக்தக்தை முன்வைப்பதற்கு தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தலைவர் குறிப்பிட்ட உத்தேச செலவு விபரங்கள் உள்ளடங்கிய குறைநிரப்பு ஆவணமொன்றைத் தயார் செய்து சபைக்கு முன்வைத்தல் வேண்டும். |
| வாசகம் 178 (3) | வரவு – செலவினை பரிசீலனைக்கு பகிரங்கமாக வைத்தல் வேண்டும். நகர சபையின் வரவு செலவுத் திட்ட அறிக்கை அல்லது குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கையை நகர சபை அலுவலகத்தில் பரிசீலனைக்காக வைத்தல் வேண்டும். |
| வாசகம்178 (அ) | (IV) வரவு – செலவுத் திட்ட அறிக்கையை சபையில் பரிசீலனைக்கு உட்படுத்துதலும் இது தொடர்பிலான தலைவரின் தத்துவங்களும்.<br><br>வரவு செலவுத் திட்ட அறிக்கை அல்லது குறைநிரப்பு வரவு செலவு அறிக்கையின் அனைத்து விடயங்களும் அல்லது அதன் குறிப்பிட்ட விடயங்கள் சபையினால்,<br><br>• சிறியளவில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படும் பட்சத்தில் அல்லது<br><br>• இதற்கு ஏதேனும் விடயமொன்று சேர்க்கப்படும் பட்சத்தில் அல்லது<br><br>• சபையின் இத்தகைய தீர்மானமொன்றுக்கு தலைவர் உடன்படாத பட்சத்தில்<br><br>• தலைவர் குறிப்பிட்ட வரவு செலவு அறிக்கை அல்லது குறைநிரப்பு ஆவணத்ததை மேலும் கருத்தில் கொள்வதற்கு சபைக்கு மீண்டும் முன்வைத்தல் வேண்டும். |

## பிரதேச சபை

| சட்ட ஏற்பாடுகள் | ஏற்புடைய விடயங்கள் |
|---|---|
| பிரதேச சபை சட்டம்<br><br>வாசகம் 168 (1) | (1) வருடாந்த வரவு செலவினை முன்வைத்தல்<br><br>• அனைத்து பிரதேச சபைகளும் ஒவ்வொரு வருடமும் எதிர்வரும் வருடத்துக்கான வரவு செலவு அறிக்கையை தயார் செய்தல் வேண்டும்.<br><br>• இந்த வரவு செலவு அறிக்கையினை தலைவர் சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.<br><br>• பிரதேச சபை விதிகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முந்திய திகதியில் வரவு செலவினை சபைக்கு முன்வைத்தல் வேண்டும்.<br><br>• வரவு செலவு அறிக்கையை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப முன்வைத்தல் வேண்டும்.<br><br>• வரவு செலவு அறிக்கையில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குதல் வேண்டும்<br><br>1. எதிர்வரும் ஆண்டிற்கு மன்றத்தால் சேகரிக்கப்பட வேண்டிய வருவாயின் மதிப்பீடு<br><br>2. வருகின்ற ஆண்டிற்கான முன்மொழியப்பட்ட உத்தேச செலவு மதிப்பீடு |
| வாசகம் 168 (3) | குறைநிரப்பு வரவு செலவினை முன்வைத்தல்<br><br>தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறைநிரப்பு வரவு செலவினைத் தயார் செய்து தலைவருக்கு சபைக்கு முன்வைக்க முடியும். |

| | |
|---|---|
| வாசகம்168 (4) | (111) வரவு செலவினை சபையில் பரிசீலித்தல்<br><br>• குறிப்பிட்ட வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் வரவு செலவினை சபையில் பரிசீலித்து தேவையான திருத்தங்கள் இருப்பின் திருத்தங்கள் சகிதம் சபைக்கு முன்வைத்ல் வேண்டும்.<br>• இச்சந்தர்ப்பத்தில் சபைக்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வரவு செலவில் உள்ளடங்கும் அனைத்து விடயடங்களையும் அல்லது அதன் ஒரு பகுதியை<br>- நிறைவேற்றுதல்<br>- திருத்துதல்<br>- வரவு செலவு அல்லது குறைநிரப்பு வரவு செலவில் குறிப்பிட்ட விடயங்களை சேர்த்தல் அல்லது<br>- நிராகரித்தல் |
| வாசகம் 169 | சபையானது வரவு செலவு அறிக்கையில் அல்லது குறைநிரப்பு வரவு செலவு அறிக்கையில் உள்ளடங்கும் அனைத்து விடயங்களையும் அல்லது அதன் ஒரு பகுதியை திருத்துமெனில் அல்லது நிராகரிக்கும் பட்சத்தில் அல்லது அதில் சில பகுதிகளை சேர்க்கும் பட்சத்தில் சபையின் இத்தகை தீர்மானத்துக்கு சபையின் தலைவர் உடன்படாத பட்சத்தில், தலைவர் குறிப்பிட்ட வரவு செலவு அறிக்கை அல்லது குறைநிரப்பு வரவு செலவு அறிக்கையை மேலும் பரிசீலிப்பதற்கு மீண்டும் சபைக்கு முன்வைத்தல் வேண்டும். |

**மூலாதாரம் - உள்ளூராட்சி மறுசீரமைப்பு கையேடு இலக்கம் 04**

## இணைப்பு 2

**சேவை பகுப்பாய்வு செயன்முறை 4**

கருத்திட்டமொன்றை பகுப்பாய்வு செய்வதற்கும் உள்ளீர்ப்பினை உறுதிப்படுத்துவதற்குமான கருவியாக சேவை பகுப்பாய்வு செயன்முறையைப் பயன்படுத்த முடியும். தேவையான மதிப்பீடை மேற்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வுகளை கண்டு பிடிப்பதற்கும் அனைத்து சேவை பிரதேசங்களையும் பகுப்பாய்வு செய்ய முடியும். அனைத்து கருத்திட்டங்களையும் தெளிவான அணுகுமுறைகள் சகிதம் அபிவிருத்தி செய்ததன் பின்னர், அதனை வருடாந்த வரவு செலவு பிரேரணையில் உள்ளீர்க்கப்பட்டுள்ள சேவைப் பிரிவுகளின் கீழ் வெளிப்படுத்தப்படும் நிதி வரவு செலவுடன் உள்ளூராட்சி நிறுவனங்களின் வருடாந்த வேலைத்திட்டத்தில் உள்ளீர்க்க முடியும். அடையாளம் காணப்பட்டுள்ள கருத்திட்டங்களை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கு தேவையான வழிகாட்டல் சேவைகளை மேம்படுத்தும் திட்டங்கள் வரைபில் காட்டப்படும்.

உள்ளூராட்சி பங்குதாரர்களுக்கு பெண்கள் மற்றும் வலுவிழந்த குழுக்களின் சில நகர சேவைகளுக்கான உள்ளீர்ப்பு மட்டம், அணுகல் மற்றும் தரமான பகுப்பாய்வுக்கு உதவும் முகமாக பிரதேச தலைவியர்களை வலுப்படுத்துவதன் மூலம் உள்ளூராட்சி சேவைகளை நவீனமயப்படுத்தும் கருத்திட்டத்தின் ( PMI-WILL) சேவை பகுப்பாய்வு கருவி தயார் செய்யப்பட்டுள்ளது. அனைத்து சேவை மேம்படுத்தல்களும் நியாயமான முறையில் அனைவரையும் உள்ளீர்க்கும் விதத்தில் குறைந்த பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள மக்களின் தேவைகளுக்கு பதிலிருப்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் இது கட்டமைப்பு ரீதியான அணுகுமுறையைக் கொண்டிருக்கும்.

முன்னுரிமை சேவைத் துறை **- 1**

### 1.சேவை பகுப்பாய்வு கண்டு பிடிப்புகள்

இச்சேவை துறை தொடர்பிலான பிரதான கண்டு பிடிப்புகள் யாவை? சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுவது மற்றும் மேம்படுத்த வேண்டியதை மேற்கொள்வதற்கு பொறுப்பாயிருத்தல்.

| பங்குதாரர்களின் தொகுதி (பெண்கள்,யுவதிகள், அங்கவீனர்கள்,அரச செயற்பாட்டாளர்கள் ஆகியோர்….) | நிலவுகின்ற சேவை தொடர்பிலான பங்குதாரர்களின் பின்னூட்டல்<br><br>( உதாரணம் - விளையாட்டு மைதானம் , பொதுப்பூங்கா, பொதுச் சந்தை, பொது மலசலகூடம், பொதுநூலகம் போன்றவை….) | | கிடைக்கப் பெற்றுள்ள நன்மைகள் |
|---|---|---|---|
| | | | |

- இச்சேவை மீது ஏன் உடனடி கவனம் செலுத்தட வேண்டும்?

## 2. உத்தேச தீர்வு

- சேவை வழங்கலின் தற்போதைய இடைவெளியை தீர்ப்பதற்கான முன்மொழிவு யாது?

| காணப்படும் இடைவெளி | நிவர்த்தி செய்வதற்கான தீர்வு |
|---|---|
| | |
| | |
| | |

- இத்தீர்மானத்தின் மூலம் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவது எவ்வாறு? இந்த உத்தேச தீர்வு வெற்றி பெற வேண்டுமெனில் இத்தீர்மானம் எவ்வாறானதாக அமைதல் வேண்டும்?

| தீர்வு | தீர்வின் மூலம் மேம்படுத்தப்படும் குறித்துரைக்கப்பட்ட சேவை தரம் |
|---|---|
| | |
| | |
| | |

- தீர்வானது பாலினத்திற்கு ஏற்ப உள்ளீர்க்கப்படுவதும் பதிலளிப்பதும் எவ்வாறு? சமூகத்தில் பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கு கிடைக்கப்பெறும் குறித்துரைக்கப்பட்ட நன்மைகள் யாவை?

### 3. வரவு செலவுத் திட்டம் மற்றும் நடைமுறைப்படுத்தல்

உத்தேச தீர்வின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள கிரயம் யாது?

| விபரம் | அளவு | அலகுகளுக்கான கிரயம் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்தக் கிரயம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

- உத்தேச தீர்வு நிலைபேறானதாக அமைவது எவ்வாறு?

- உத்தேச தீர்வினை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரம் உள்ளதா?

| விடயப் பரப்பு | சட்டரீதியான நிதி ஏற்பாடுகள் |
|---|---|
| | |
| | |

### 4. இலக்கிடப்படும் திகதி

- உத்தேச தீர்வினை பூர்த்தி செய்வதற்கான காலவரையறை யாது ?

-உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்கு வெளியேயான புறக்காரணிகள் மூலம் காலவரையறை நியாயப்படுத்தப்பட்டுள்ளதா அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா?

### 5.பொதுமக்களின் பங்கேற்பு

- உத்தேச தீர்வினை மேம்படுத்துகையில் வெளித்தரப்புக் குழுவினர் இதில் பங்கேற்றுள்ளார்களா? ஆமெனல், 5 வெளித்தரப்பு குழுவினர்களை குறிப்பிட்டு அவற்றின் விடயப்பொறுப்பினை குறிப்பிடுக.

FSLGA

FEDERATION OF SRI LANKAN LOCAL GOVERNMENT AUTHORITIES

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம்